# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஏப்பிறல் மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2014 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டம்*

[*2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 8/2014*

## *2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.*** *இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, எல்லா நோக்கங்களுக் காகவும் 2014, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.*

*2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத் தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, "விதிப்பனவு செய்யப் படுதலும் வேண்டும்:" என்னும் சொற்களில் இருந்து "பெறுமதி யின் மீது இருபது சதவீதத்தில்;" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-*

*"விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும் :-*

*(அ) 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப் பகுதிக்காக, இருபது சதவீதப்படி ;*

*(ஆ) 2013, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2014, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற காலப்பகுதிக்காக-*

(i) இணையச் சேவைகளின் வழங்கலின் பெறுமதியின் மீது பத்து சதவீதப்படி ; அத்துடன்

(ii) இணையச் சேவைகளின் வழங்குதல் தவிர்ந்த வேறு தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது இருபது சதவீதப்படி ;

(இ) 2014, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்காக-

(i) இணையச் சேவைகளின் வழங்கலின் பெறுமதியின் மீது பத்து சதவீதப்படி ; அத்துடன்

(ii) இணையச் சேவைகளின் வழங்குதல் தவிர்ந்த வேறு தொலைத்தொடர்பு சேவைகளின் வழங்குதலின் பெறுமதியின் மீது இருபத்தைந்து சதவீதப்படி ,".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு, "ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களுடன் சேர்த்து செலுத்தப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரங்களுடன் சேர்த்து செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், 2014, மே 1 ஆம் தேதியிலிருந்து, விலைப்பட்டிகளைத் தயாரிப்பதற்கு முன்னர் அல்லது விலைப்பட்டிகளைத் தயாரிக்காமல் அறவீடு சேகரிக்கப்படுமிடத்து-

(அ) ஏதேனும் மாதத்தின் 1 ஆம் நாளிலிருந்து தொடங்கி அதன் 15 ஆம் நாள் வரையிலான காலப்பகுதிக்காகச்

சேகரிக்கப்பட்ட அத்தகைய அறவீடானது அம்மாதத்தின் 20 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அந்த மாதத்தின் 16 ஆம் நாளிலிருந்து தொடங்கி அம்மாதத்தின் முடிவு வரையிலான காலப் பகுதிக்காகச் சேகரிக்கப்பட்ட அத்தகைய அறவீடானது அடுத்து வருகின்ற மாதத்தின் 5 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, "அறவீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள் திரட்டு நிதியத்திலிருந்து வரவு வைக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறவீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து ஐந்து நாட்களுக்குள் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, "இயக்குநர்" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

" "இயக்குநர்" என்பது, பொதுப் பணஞ் செலுத்தும் தொலைபேசிச் சேவையை வழங்குவதற்கு மட்டுமே அதிகாரமளிக்கப்பட்ட இயக்குநர் தவிர்ந்த, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத் தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் உரிமமளிக்கப்பட்ட இயக்குநரொருவர் என்று பொருள் படும்.".

செல்லுபடியாதல்.

**6**. 2014, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கி, இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் எத்தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது, விதிப்பதற்கு அல்லது சேகரிப்பதற்கு இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காக

எவரேனும் பாவனையாளரிடமிருந்து முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் இயக்குநரினால் விதித்துச் சேகரிக்கப்பட்ட தொலைத்தொடர்பு அறவீடு இச்சட்டத்தின்கீழ் செல்லுபடியான முறையில் விதிக்கப்பட்டு அத்தகைய இயக்குநரினால் சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இப்பிரிவின் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், அக்காலப் பகுதியின்போது விதித்துச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் அறவீடு தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவையேனும் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்